


# பாவங்களிலிருந்து விலகி நிற்போம்

***''எவன் (பாவங்களை விட்டு விலகிப்) பரிசுத்தவானாகிறானோ அவன் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டான்.''   (87: 14)***

''நிச்சயமாக அல்லாஹ் நன்மைகளையும் தீமைகளையும் பதிவு செய்கிறான்'' என்று கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தொடர்ந்து பின்வருமாறு விபரித்தார்கள்.

''ஒருவர் நன்மை செய்ய நினைத்துவிட்டால் அல்லாஹ் அதற்கு ஒரு முழு நன்மையைப் பதிவு செய்கிறான். அவர் அதனை செய்துவிட்டால் அதற்கு பத்து முதல் எழுநூறு நன்மைகள், அல்லது அதற்கும் அதிகமாக எழுதுகிறான். ஒருவர் தீமை செய்ய எண்ணி, அதை அவன் செய்யாது விட்டு விட்டால், அல்லாஹ் அதற்கு ஒரு முழுமையான நன்மையை எழுதி விடுகிறான். அதை அவன் செய்துவிட்டால், அதற்கு ஒரு பாவத்தையே எழுதுகிறான். (புகாரி, முஸ்லிம்)

மனிதர்களுடைய செயல்கள் இரு வகைப்படும். ஒன்று நன்மையானவை; மற்றையது பாவமானவையாகும்.

நன்மையானவை மக்கள் விரும்புகின்றவையாகும். பாவமானவை, தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் தீங்கு விளைவிப்பவையாகும். பாவங்கள் நடைபெறுவதன் காரணமாக மானுட தர்மம் மீறப்படுகிறது. சமூகத்தின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகிறது. உலகில் குழப்பங்கள் மென்மேலும் அதிகரிக்கின்றன.

நன்மைகளை அதிகமாக செய்யுமாறும் பாவகாரியங்களிலிருந்து முழுமையாக விலகி நடக்குமாறும் இஸ்லாம் எமக்குக் கட்டளையிடுகிறது. நன்மையான செயல்கள் மனத்திருப்தியையும் மனமகிழ்வையும் ஏற்படுத்தி எம்மை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். பாவமான செயல்கள் மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்தி உள்ளத்தை இருளடையச் செய்யும்; நரகத்திலும் வீழ்த்திவிடும். பாவத்திற்குரிய கூலி தீமையே ஆகும். பாவங்கள் புரிவோரைத் தண்டிப்பதாக அல் குர்ஆன் எச்சரிக்கை செய்கின்றது.

***''ஆகவே (நம்மைச்) சந்திக்கும் உங்களுடைய இந்நாளை நீங்கள் மறந்து விட்டதன் பலனை, நீங்கள் அனுபவியுங்கள். (இந்நாளை நீங்கள் மறந்தவாறே இன்று) நாமும் உங்களை மறந்து விட்டோம். நீங்கள் செய்து கொண்டிருந்த (தீ)வினையின் காரணமாக என்றென்றும் நிலையான வேதனையைச் சுகித்துக் கொண்டிருங்கள்.'' (32: 14)***

பாவங்கள் இரு வகைப்படும். ஒன்று சிறுபாவம், மற்றையது பெரும் பாவம். சிறுபாவம் பெரும் பாவங்களுக்கு இட்டுச் செல்லும். பெரும் பாவங்கள் அழிவை ஏற்படுத்தும். பாவங்களைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்த பல சமூகங்கள் அழிக்கப்பட்ட வரலாற்றை அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது. ஆத், ஸமூது கூட்டத்தினர், பிர்அவ்னும் அவனுடைய பரிவாரங்களும், நும்றூத் போன்றோரும் அவ்வாறு அழிக்கப்பட்டோருக்கு உதாரணங்களாகும்.

இவ்வுலகில் பிறந்த மனிதர்கள் யாவரும் மரணிப்பர். மறுமையை எல்லோரும் சந்தித்தேயாக வேண்டும். அவ்வேளை, அனைவரும் தத்தமது செயல்களுக்கு நியாயம் கூற வேண்டும். செய்த பாவங்களை யாரும் மறுத்துரைக்க முடியாது. ஏனெனில், விசாரணையின்போது உடல் உறுப்புக்கள், பாவம் நடந்த இடங்கள், மலக்குகளின் பதிவுகள் போன்ற சாட்சியங்கள் மூலம் அவை நிரூபிக்கப்படும்.

***''அன்றைய தினம் நாம் அவர்களுடைய வாய்கள் பேச முடியாதவாறு அவை மீது முத்திரையிட்டு விடுவோம். அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசும். அவர்கள் செய்து கொண்டிருந்த (பாவமான) காரியங்களைப் பற்றி அவர்களுடைய கால்களும் சாட்சி கூறும். (36: 65)***

ஒருவர் தனது செயல்களை மற்றவர்களுக்குத் தெரியாது மறைத்துக் கொள்ள முடியும். ஆனால், தன்னோடிருந்து தன்னை இயக்குகின்ற தனது உடல் உறுப்புக்களுக்குத் தெரியாமல் மறைக்க முடியுமா? மனிதனின் செயல்கள் யாவும் உறுப்புக்களாலேயே நிகழ்த்தப்படுகின்றன. இந்நிலையில், அவையே மறுமையில் சாட்சிகளாக நிறுத்தப்பட்டால் அவற்றை மறுக்க முடியுமா?



***''எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தானோ, அதனையும் அவன் (அங்கு) கண்டு கொள்வான்.'' (99: 8)***

*மனிதர்கள் பாவம் செய்யும் இயல்பைக் கொண்டிருக்கிறார்கள். ஷைத்தான் மனிதனுடைய விரோதியாவான். அவன் பாவத்தின் பக்கம் மனிதனைத் தூண்டிக் கொண்டே இருப்பான். அவனுக்கு வழிபடுவோரை மறுமையில் கைவிட்டு விடுவான். அவனின் சூழ்ச்சியிலிருந்து விடுபட இறை சிந்தனையின் பக்கமும் இபாதத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறே நல்ல சூழலிலும் நல்லவர்களின் நட்புடனும் வாழ முயற்சிக்க வேண்டும்.*

***''அன்றி நன்மைக்கும் (அல்லாஹ்வுடைய) பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக் கொருவர் உதவியாக இருங்கள். பாவத்திற்கும் அக்கிரமத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம்'' (5: 2)*** *என்று அல் குர்ஆன் எமக்கு அறிவுறுத்துகின்றது.*

***''நபியே! நீர் கூறும், நிச்சயமாக என்னுடைய இறைவன் (ஆகாதென்று) தடுத்திருப்பதெல்லாம் பரகசியமாகவோ இரகசியமாகவோ செய்யப்படும் மானக்கேடான செயல்களையும், மற்ற பாவங்களையும் நியாயமின்றி (ஒருவர் மீது ஒருவர்) கொடுமை செய்வதையும் யாதோர் ஆதாரமும் இல்லாதிருக்கும்போதே அல்லாஹ்வுக்கு நீங்கள் இணைவைப்பதையும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும் தான்.'' (7: 33)***

*அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தடுத்த சில பெரும் பாவங்கள் வருமாறு:*

- *அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்*
- *சூனியம் செய்தல்*
- *கொலை செய்தல்*
- *வட்டியை உண்ணுதல்*
- *அனாதைகளின் சொத்துக்களை அனுபவித்தல்*
- *போரின்போது புறமுதுகு காட்டி ஓடுதல்*
- *கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறுதல் (புகாரி,முஸ்லிம்)*

***இன்னும் சில பாவங்கள் பற்றி அல் குர்ஆனும் ஹதீஸும் விளக்கியுள்ளன.***

***''விசுவாசிகளே! நிச்சயமாக மதுபானமும் சூதாட்டமும் விக்கிரக ஆராதனையும் அம்பெறிந்து குறிகேட்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளில் உள்ளவையாகும்.'' (5: 90)***

*''பெற்றோருக்கு துன்பமிழைப்பவனும் கோள் சொல்லித் திரிபவனும் மதுவில் மூழ்கியிருப்பவனும் சுவர்க்கம் நுழைய மாட்டார்கள்.'' (புகாரி, முஸ்லிம்)*

***''ஆணோ, பெண்ணோ எவர் திருடினாலும் இ(த்தீ)ச் செயலுக்குத் தண்டனையாக அவர்களின், கைகளைத் துண்டித்து விடுங்கள்.''(5:38)***

*''தற்கொலை செய்பவன் அதனைக் கொண்டே மறுமையில் வேதனைக் குள்ளாக்கப்படுவான்.'' (திர்மிதி)*

பல பாவச் செயல்கள் உள்ளன. அவற்றிலிருந்து நாம் ஒதுங்கி வாழ வேண்டும். பாவங்கள் படைப்பினங்களோடு தொடர்பு பட்டிருந்தால் உரியவர்களிடம் மன்னிப்புக் கோருவது கட்டாயமாகும். பின்னர் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோர வேண்டும். அவை அல்லாஹ்வுடன் தொடர்புபட்டிருந்தால் நேரடியாக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோர வேண்டும். இதுவே வெற்றிக்கான வழியாகும்.

*''எவரேனும் தம்முடைய தீய செயலுக்குப் பின்னர், பச்சாதாபப்பட்டு (தன் குற்றத்தைச்) சீர்திருத்திக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் அவருடைய மன்னிப்புக் கோருதலை அங்கீகரிப்பவனாக இருக்கின்றான்.'' (5: 39)*

**இவ்வழிகாட்டல்களைப் பின்பற்றி பாவங்களிலிருந்து தவிர்ந்து அதிகம் நன்மைகளைச் சேமித்து மறுமையில் நற்பேறு பெற முயல்வோமாக.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

عَادٌ    ثَمُوْدُ

### பயிற்சி

1. *பாவச் செயல்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று கூறுக.*
2. *ஆத், ஸமூத் ஆகிய சமூகங்கள் அழிக்கப்பட்டதற்கான காரணம் யாது?*
3. *மறுமையில் விசாரணயின்போது கொண்டு வரப்படும் சாட்சியங்கள் யாவை?*
4. *முஸ்லிம்கள் எவ்விடயத்தில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டுமென அல் குர்ஆன் கூறுகிறது?*
5. *திருட்டுக் குற்றத்திற்கான தண்டனை யாது?*
6. *பாடத்தில் கூறப்பட்ட பெரும் பாவங்கள் ஏழையும் குறிப்பிடுக.*
7. *தவறுதலாகப் பாவம் செய்து விட்டோர் செய்ய வேண்டிய பரிகாரம் யாது?*
8. *பாவச் செயல்கள் பரவாது தடுப்பற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் சிலவற்றை பட்டியற்படுத்துக.*